# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் **அவசரக்கூட்டம் 21-07-2025 திங்கள்கிழமை காலை** 11.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

பொருள் எண்.1

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 21 வார்டுகளில் உள்ள பகுதியில் 17-07-2025, 04-09-2025, 09-09-2025, 10-09-2025, 11-09-2025 மற்றும் 12-09-2025 மேலும் 08-10-2025 ஆகிய தேதிகளில் “உங்களுடன் ஸ்டாலின்” 7 சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. முகாமில் 13 துறைகளில் 43 சேவைகள் வழங்கப்படவுள்ளது. மேற்படி முகாமிற்கு தேவையான மண்டப வாடகை விளம்பர பலகைகள், பிளக்ஸ் வைத்து கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வாடகைக்கு எடுத்தல் பணியாளர்களுக்கு உணவு வழங்குதல் மற்றும் ஒலி பெருக்கி வசதி மேலும் இதர செலவுகளுக்கும் உத்தேச செலவினமாக ரூ.8.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2316/2023/அ1.
மன்றத்தீர்மான எண்.1395 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சியில் தமிழ்நாடு அரசின் நான்கு ஆண்டு சாதனைகளை விளக்கும் விதமாக சாதனை விளக்கம் கையேடுகளை அச்சிட்டு பொதுமக்களுக்கு சார்பு செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநரின் ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் குழித்துறை நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான கையேடுகளை “Thoothukudi District Co-operative Society Ltd. IND No.Turi.5” என்ற கூட்டுறவு நிறுவனம் மூலம் 8 பக்கங்கள் கொண்ட 10000 பிரதிகள் அச்சடித்து வழங்கிடவும் ஏற்படும் செலவினத்தொகை ரூ.2,65,500/- மேற்கண்ட கூட்டுறவு அச்சகத்திற்கு வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2072/2025/இ1.
மன்றத்தீர்மான எண்.1396 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.3</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட தாமிரபரணி ஆற்றின் கரை ஓரத்தில் அமைந்துள்ள வி.எல்.சி.திருமண மண்டபம் செயல்பட்டு வருகிறது. இதன் மேற்பகுதி GI கூரையினால் ஆனது. தற்போது போதிய வசதி இல்லாத காரணத்தாலும், GI கூரை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதாலும், பழுதடைந்த பழைய கட்டிடம் ஆனதாலும், அதனை இடித்து அப்புறப்படுத்தி புதியதாக திருமண மண்டபம் அமைக்க கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2025-2026-ன் கீழ் ரூ.655.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே (KNMT) திட்டம் 2025-2026-ன்கீழ் புதிதாக திருமண மண்டபம் அமைக்க பழைய கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திட ரூ.9.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3210/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.1397 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறைநகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.